<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். 53/2022</u>

2025- ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 – ஆம் நாள் திங்கள்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருநாதன் (எ) சுப்ரமணியன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | சந்திரகாசன் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | குன்னம் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 52/2025 |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

1. வாதி அண்ணாதுரை எனதே மூத்த அண்ணன் என்றால் சரிதான். எனது பெயர் ஆவணங்களில் எல்லாம் குருநாதன் என்று மட்டுமே உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து 231/3A ல் உள்ள 62 செண்ட் நிலங்கள் எனது தாத்தாவின் பெயரில் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா காளிங்கராய படையாச்சிக்கு சிதம்பரம் படையாச்சி என்ற மகன் இருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேலலே உள்ள 62 செண்ட் நிலத்தை எனது அப்பா சந்திரகாச படையாச்சியும் எனது பெரியப்பா சிதம்பர படையாச்சியும் ஆளுக்கு 13 1/2 செண்ட் இடத்தை தெற்கே சிதம்பர படையாச்சியும், வடக்கே எனது அப்பா சந்திரகாச படையாச்சியும், பிரித்துக்கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. எனது அப்பா சந்திரகாச படையாச்சிஇறந்து விட்டார் என்றால் சரிதான். அதன் பிறகுதான் எனது தாத்தா காளிங்கராயர் படையாச்சி இறந்தார் என்றால் சரிதான். எனது அண்ணன் அண்ணாதுரை, ரவி மற்றும் நான் ஆகியோர் எனது தாத்தாவுடன் கூட்டுக்குடும்பமாக தான் இருந்து வந்தோம் என்றால் சரிதான். (வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMDUMJM COURT, KUNNAM